69

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றுண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-4 திருதலம், மாம்பாக்கம்; நந்தன, சித்திரை; 6—6—52. தளிர்-36

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அறத்தின் இயல்பு

உலகத்தில் அறச் செயல்கள் பலவேறு வகையாக மேற்கொள்ளப் பெறுகின்றன. பிறன் ஒருவன், அறம் காரணமாகப் பலராலும் போற்றப் படுவானாயின், அவன் புகழைக் கண்டு பொறாமல் தாமும் அத்தகைய அறங்களைச் செய்து புகழீட்ட விரும்பி அச்செயலில் சிலர் இறங்குகிறார்கள். அவ்வறம் இயல்பானதன்று. அழுக்காற்றை அடிப்படையாகக் கொண்டு பகட்டுக்காகச் செய்யப் படுவது.

இத்தகையோர் புலன்கள் மேற்செல்லும் அவாவைத் தடுக்க இயலாதவராவர். அவாக் காரணமாக வெகுளியும், அவ் வெகுளியைப் பற்றி வரும் கடுஞ் சொல்லு மாகிய குணங்கள் இவரை என்றும் நீங்காது பற்றி நிற்பனவாகும்.

அறம், அருளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது. அழுக்காறு முதலிய குணங்கள் நடமாடும் இடத்தில் அருட்பண்புக்கு இடமேது?

ஆகவே, பயன் ஒன்றும் கருதாமலும், மேற் சொல்லிய அழுக்காறு முதலிய நால்வகை இயல்புகளையும் ஒருங்கே நீக்கியும் மாசற்ற தூய நிலையில் அருட்பண்போடு செய்யப் படுவதுதான் 'அறம்' ஆகும் என்று வற்புறுத்தினார்.

அழுக்கா(று)அவா வெகுளி
இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற(து) அறம்.

அழுக்காறு – பிறர் ஆக்கம் பொறாமையும்; அவா – புலன்கள் மேற் செல்லுகின்ற அவாவும்; வெகுளி – அவை ஏதுவாகப் பிறர் பால் வரும் வெகுளியும்; இன்னாச் சொல் – அது பற்றிவரும் கடுஞ் சொல்லுமாகிய; நான்கும் இழுக்கா இயன்றது அறம் – இந் நான்கினையும் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது.

இதனால், இவற்றோடு விரவி இயன்றது அறமெனப் படாது என்றாயிற்று. இயலுதல்–இடையறாது நடத்தல். எக் காரணத்தைக் கொண்டும் இடையீடு படாமல் தொடர்ந்து ஒல்லும் வகையால் செய்ய வேண்டுமாதலின் 'இயன்றது' என்னும் சொல்லாற் போற்றப்பட்டது. இழுக்கா; செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சம். இச் செய்யுள் அறத்தின் இயல்பு இனைத்தென்று வரையறுத் துரைக்கின்றது.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | நந்தன, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 4 | 6-6-52 வெள்ளி | 36 |


## தமிழ் நாட்டுச் சிற்பக் - -

## - - கலையும் கோவிலும்.

தமிழ் நாட்டுக்கலை இன்று பேணி வளர்க்கப்படவில்லையெனினும், திரு டக்லஸ் போட் அவர்களின் உரையைக் கொண்டு இஃது இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளதென்றுகொள்ளுவதில் யாதொரு பிழையும் இல்லை. இக் கலைச் சிறப்பு, கோவில்களில் இருப்பதனாலும் நாம் கோவில்களுக்குச் செல்லும் பழக்கத்தைக் கைவிட்டதனாலும் நமக்கு நம் கலையின் சிறப்பே தெரிய முடியாமற் போயிற்று. வட நாட்டுக் கலை அவ்வளவு சிறப்புப் பெற்றிலதாயினும் அதன் பெருமை மிகைபடப் பேசப்படும்போது இந்நாட்டுக் கலை மிகச் சிறந்ததெனினும் பிறர் அறிய முடியாமல் மறைப்புண்டிருத்தற்குக் காரணம் நாம் கலையுணர்வற்றவராய் இருந்தலேயாகும். நம் முன்னோர் அரும் பாடு பட்டு நமக்களித்த கலைச் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் கண்டு களிக்கவும் கூடத் தகுதியற்றவராய்த் தாழ்ந்துவிட்டோம்.

தாழவே, உயர்ந்த கலைக்கும் நமக்கும் இடையே ஒரு பெருந்திரை தோன்றி விட்டது. அது இம் மேனாட்டுக் கலைஞர் 'அஞ்சத்தக்க அழுக்குப் பண்டம்' என்று வெருவிக்கூறிய காரையும் செங்கல்லும் சுண்ணாம்புமாகும்.

பேருழைப்பால் அழகுபடச் சமைக்கப்பட்ட சிற்பங்கள் மக்கள் கவனத்தை ஈர்த்துத் தம்மைச் சமைத்தவர் கருதிய உயர்ந்த கருத்துக்களைக் கண், உதடுகளின் குறிப்பாலும் கை கால்களின் அமைப்பாலும் வெளிப்படுத்தவன்றோ இருக்கின்றன? (சமய அறிவு நிரம்பப் பெற்ற சிற்பிகள் சமய உண்மைகள் பலவற்றைத் தம் சிற்பங்களின் வாயிலாக மக்களுக்கு உணர்த்தும் நோக்கம் உடையவராய் இருந்தனர் என்பதற்கு, தென் முகக்கடவுள் ஆடலரசு போன்ற சிற்பங்கள் சான்று பகரும்.) அச் சிறந்த சிற்பிகளின் நோக்கம் கெடும் வகையில் அவர்கள் அரும்பாடு பட்டுச் சமைத்துவைத்த அழகொழுகும் சிற்பங்களின் மேல் பல முறை வெள்ளையடித்த நம் அறியாமையை என்னென்பது. நம் அறியாமை இதோடு நிற்கவில்லை. நாயன்மார் தென்முகக் கடவுள் போன்ற சிற்பங்களின் மேல் பல ஆண்டுகளாக எண்ணெயை ஊற்றி அதன்மேல் அழுக்குப் படியும்படியும் செய்து விட்டோம். இஃது கலை நுணுக்கங்களை மறைத்துக் கலைஞனது கூர்மையான கலைப்பார்வையை மழுங்கவைப்பதாய் உள்ளது. உருவங்களுக்கு முழுக்கிடும் போது சமய வழிபாட்டு முறைப்படி எண்ணெய் ஊற்றப்படுகிறதென்று கூறப்படுமானால் அவை உடனே சிகைக்காயால் கழுவப்பட்டுத் தூய்மையாக வைக்கப்படாமை எதனாலோ? அவ்வாறே சிற்பங்களின் மேல் அழுக்குப் படிகிறதென்று வெள்ளையடிக்கப் படுவதாகக் கூறப் படலாம். சுண்ணாம்பு காரைகளால் உருவங்களை மழுப்பி மூடி விடுவதை விட நீர் ஊற்றிக் கழுவி, கலைத்திறம் தோன்ற விளக்கமாக வைத்தல் முறையாகாதோ?

சுண்ணாம்பையும் காரையையும் கலை நோக்கோடு கண்ட இக் கலைஞர் அஞ்சத்தக்கவை என்று மட்டும் கூறினர். வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கும் போது இவை தமிழர்களின் பகை என்று கூறினும் பொருந்தும். எவ்வாறெனின் சுண்ணாம்பு செம்மண் முதலிய இவ் வழக்குகள் நம் முன்னோர் வாழ்ந்த வகையைக் கூறும் கல்வெட்டுகள் பலவற்றை மறைத்து வைத்துள்ளன. வேறெங்கும் காண இயலாத அளவுக்கு மிகப் பல கல்வெட்டுகள் இந்நாட்டில் இருந்தும் ஒழுங்கான தமிழ் நாட்டு வரலாறு இதுவரையும் தோன்றாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். இம் மேனாட்டுக் கலைஞரின் அறிவுரையைக் கொண்டேனும் நாம் இப் பண்டங்களை நீக்க முயலவேண்டும்.

கோவில் கண்காணிப்பாளர் இப்பணியில் கருத்திருத்துவாராயின் எளிதில் நீக்கி விடலாம். இவர் வேண்டுகோளின்படி கோவில் மதிலுக்குள் வெள்ளையடிப்பதை ஒரு பெருங் குற்றமாக்குதலோடு இப்பண்டங்களை உடனடியாக நீக்க வேண்டுமென்று ஆட்சியாளர் சட்டம் பிறப்பித்தல் மிகவும் வரவேற்கத்தக்கதாகும். அது கலையைப் பாதுகாப்பதோடு வரலாற்றாசிரியர்களுக்கும் உதவி புரிவதாகும்.

இனி, முழுமுதலிறை எவ்வாறு எல்லா உயிர்களுக்கும் பொதுவோ அவ்வாறே அதனைக் குறிக்கும் உருவங்களும் ஓவியங்களும் எல்லார்க்கும் பொதுவேயாம். எனவே வேற்றுச் சமயத்தவர் கோவிலுக்குள் புகக் கூடாதென்பது பொருந்தாது. அதோடு கலைச்சிறப்பைக் காணும் ஆவலோடு வந்தவரை வரவேற்று, கோவிலிலுள்ள உருவங்களும், அருவுருவமும், சிற்பங்களும் ஓவியங்களும் குறிக்கும் சமயக் கருத்துக்களையும், பிறவரலாறுகளையும் விளக்கிச் சொல்லி தெளிவுபடுத்தி, இன்புறுவதற்கு மாறாக மனம் நோகும்படி இறையகத்தினுள்ளே விடமறுத்தமை குற்றமாகும். இப்படிப்பட்ட கொடிய பழக்கங்கள் நம்மைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்ளும் வாய்ப்பை அழித்துவிடுகின்றன. அதனால் அவர்கள் இந்நாட்டுச் சமயம் வெறும் சடங்குகளையும் மூடப் பழக்கங்களையும் மட்டுமே உடையது என்று எண்ணுமளவுக்குத் தீங்குண்டாகிறது. அதோடு பிறசமயங்கள் இந்நாட்டில் மிக எளிதாகப் புகுந்து பரவுவதற்கும் துணை புரிந்து வருகின்றன. இந்நாட்டுக் கலையைப் பற்றிப் பிறர் அறிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு அறிய முடியாமைக்கு இப் பழக்கவழக்கங்கள் இன்றும் நம்மை விட்டகலாமை ஒருபெருங்காரணமன்றோ? வேற்றவர்களின் உடைநடைகளோடு இறையகத்தைக் காணக் கூடாதென்றால் அதனை அவர்களுக்கு விளக்கிக் கூறிக் கோவில் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தி உள்ளே விட்டாலென்ன? இதையும் செய்யாமல் உட்செல்லுதலை மறுக்கும் கொடுமை நம்மிடம் இருக்கும்வரை இந்நாட்டுக் கலைக்கும் சமயத்திற்கும் நாம் தீங்கிழைத்தவர்களாவோம்.

மனம் நொந்து திரும்பிச் சென்ற திரு. டக்லஸ் போட் அவர்களை மீண்டும் வரவழைத்து அவர் காண விரும்பும் எல்லாக் கோவில்களின் சிற்பங்களையும் ஓவியங்களையும் தடையின்றிக் காணச் செய்து இன்புறுத்தியும், கோவில்களைச் சான்றோர்களுக்கும் கலைஞர்க்கும் தொழிற்கூடங்களாக மாற்றும் நாளை, நம் முன்னோர் திரட்டிவைத்த கலைச் செல்வங்களைக் காத்து அவர்வழி நடந்த நன்னாளாகும். இந் நன்னாளைக்காண கோவிலுக்கும் நமக்கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்கிக் கொண்டு தமிழ்க்கலை மறுமலர்ச்சிக்குத் திருவருள் துணையோடு முயல்வோமாக.

—மெய்கண்டான்.


## குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தனிமைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ 1.

10. ஆத்திசூடி – கருத்துரை
விலை 0-0-3.

**கிடைக்கும் இடம் :**

குருதலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், **P. O., (S. I. R.)**

# * வானோவியங்கள் *

(குப்புசாமி)

கோடைக்காலத்திலே இம் மேகங்களின் தோற்றம் இன்னும் அழகாக இருக்கின்றன. மழை பொழிதற்குமுன் வெண் மேகங்களில், மின்னல் மின்னி மறைவது ஒரு தனி அழகாயிருக்கின்றது ஒரு வெண் திரைக்குப் பின், கொளுத்தின ஒரு திவட்டியைக் கொண்டு வந்து, சுடர் அத் திரைக்கு முழுவதும் தெரியும்படியாக அத் திவட்டியைச் சுற்றிக் காட்டி விட்டு மறைத்தால், எதிரிலிருந்து பார்ப்பவர்க்கு எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது வெண்மேகத்தினிடையே மின்னல் மின்னி மறைவது.

கருமேகங்களிலும், மழை பெய்த பிறகு மின்னும் மின்னல் கண்ணைப் பறிக்கும் ஒளியை வீசுகிறது. ஆயிரம் மின்விளக்குகள் ஒருங்கே எரிந்து அணைந்தாலும், இம் மின்னலொளிக்கும், அழகுக்கும் இணையாகா. கொடி கொடியாக வேறே மின்னும் மின்னல்தான் எவ்வளவு அழகை அள்ளி இறைக்கிறது! மேகங்கள் ஒன்றோடொன்று மோதும் போது அச்சத்தைத் தரும் இடியோசை கேட்கின்றது; பின் முழவு இசைப்பது போன்ற இன்னிசையும் கேட்கின்றது. ஒரு கனத்த துணியையோ, அல்லது மெல்லிய தகட்டையோ கிழித்தாலுண்டாகும் ஓசையைப் போலக் கேட்கின்றது சில சமயங்களிலே.

மழைக்குப் பின் வானிலே தோன்றும் வானவில்தான் எத்தகைய அழகோடு மிளிர்கின்றது, ஏழுவகையான வண்ணங்களைக் காட்டிக்கொண்டு!

வறண்ட மேகங்களும் (**Dry Clouds**) பிற வகையான புகைத்திரள்களும் ஒருங்கு சேர்ந்தும், பிரிந்தும் செல்லும்போது எத்தனை வகையான சித்திரங்கள் தோன்றுகின்றன வானிலே! இதோ! பளிங்கு போன்ற பளபளப்பான வெண்ணிற மேனியுடனும், தலையில் சுருட்டை மயிரோடும், சிறிய தாடியுடனும், ஒரு கிரேக்க உருவத்தைப் போல, ஒரு கந்தருவர் சிறிது வயது சென்றவர், கையில் ஒரு குழந்தையை ஏந்திக்கொண்டு பறந்து வருகிறார் ஒற்றை இறக்கையுடன். குழந்தைக்குச் சொந்தக்காரர் அவரைத் துரத்திக் கொண்டு வந்து சண்டையிட்டு அவருடைய இறக்கைகளிலொன்றைத் துணித்து விட்டிருக்கிறார்கள். எப்படியோ தப்பித்துக்கொண்டு ஓடி வந்திருக்கிறார். குழந்தையை யாரிடம் கொடுப்பாரோ? நமது கண்ணிற் படாமற் குழந்தையைக் கொடுத்துவிட அதோ! அவரும் மறைந்து போகிறார்.

கருநிறமுள்ள புகைத் திரள்களின் சித்திரங்களைக் கவனியுங்கள்! இதோ! இப் பக்கம் ஓர் பசுஞ்சோலை; அப்பக்கம் ஓர் ஆலங்காடு. இவற்றிற்கிடையே நிரல் நிரலாகப் பறந்து செல்லும் பறவைக் கூட்டங்கள். அதோ! அந்த யானை மீது அம்பாரி வைத்திருக்கிறது. கொற்றக் குடையோடு அதில் அமர்ந்திருப்பவன் இந்திரனைத் தவிர வேறு யாராயிருக்க முடியும்? தேவலோகக் காட்சிகளை எத்தனை நாளைக்குத்தான் பார்த்துக் கொண்டிருக்க முடியும் அவனால், சலிப்பில்லாமல்? பூலோகக் காட்சிகளைப் பார்க்க வந்திருக்கிறான் இப்போது. சிறிது பார்த்தபின் அவனும் மறைந்து விடுகிறான் யானையோடு. யானை போன பின்பு அவ்விருந்த இடத்தை இப்போது சிங்கம் நோக்கி என்ன பயன்? தோல்வியால் வெட்கமடைந்து சிங்கமும் மறைந்து போகிறது.

அதோ! நீல நிறமுள்ள அம் மலையையும் அதிலிருந்து விழும் அருவியையும் பாருங்கள்! அருவியின் கீழே ஒரு பொய்கை. அதில் தாமரை இலைகள் வட்ட வட்டமாக இருக்கின்றன. சில பூக்களும் பூத்திருக்கின்றன. கதிரவனின் கதிர்கள் பட்டு அஃதோர் பொற்றாமரைப் பொய்கையாகத் தோற்றமளிக்கின்றது. பக்கத்திலே இரண்டொரு குளங்கள் கரைகள் கரு நிறமாகவும், நீருள்ள இடங்கள் இலேசான செந்நிறமாகவும், மஞ்சள் நிறமாகவுமிருக்கின்றன.

இந்த முதலையைப் பாருங்கள்! "ஏதாவது இரை அகப்படுமா?" என்று தன் வாயைத் திறந்து கொண்டு காத்திருக்கின்றது. அந்தப் பாலைவனத்தைப் பாருங்கள்! ஒட்டகங்கள் தம் பயணத்தை மெதுவாகச் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

இப்படி பல சித்திரங்கள் ஒரு நாளைக் கொருவித மாகத் தோன்றி மறைகின்றன. புகைத் திரள்களின் கூட்டாலே ஆகும் இச் சித்திரங்களுக்கு ஒளியும் வண்ணமும் கதிரவனின் கதிர், காற்று, இவைகளின் சேர்க்கை யாலே உண்டாகின்றன வென்று அறிவியலார் கூறுகின் றார்கள்.

மாலைக்காலம் சென்ற பின்பு இரவு நேரம் வருகிறது. ஒப்பனை யுடன், கவிஞர் பாரதிதாசன் கூறுவது போல,

“மேற்றிசைக் கதிர்ப் பழத்தை
விருந்துண்டு நீல ஆடை
மாற்றுடை யாயுடுத்து மரகத
அணிகள் பூண்டு
கோற்கிளை உறங்கும் புட்கள்
கொட்டிடும் இறகின் சத்தக்
கார்சிலம் பசையக் காதற் கரும்பான”

இரவு வருகிறது.

இரவுக்கு எழிலைத் தரும் நிலவு ஒரு பெரிய வெள்ளிப் பேழை யாகவும், விண் மீன்கள் அப் பேழையிலிருந்து சிந்திய முத் துக்களாகவும் விளங்குகின்றன. விண்ணிலே நிலவு பால்போல் காய்கிறது; பாலிலே உறை மோர் ஊற்றிக் கடைந்து, திரண்ட வெண்ணெயை எடுத்து ஓர் குன்றின்மேல் வீசி விட் டால் எப்படி இருக்கும்? அப் படி இருக்கிறது குன்றின் மேற் படும் நிலவின் ஒளி. அவ் வொளியாகிய வெண்ணெயை அள்ளி உண்ணச் செய்கிறார் கவிஞர் நம்மை. தன் ஒளி முழுவதையும் காட்டிவிட்டால், அவ்வழகு வெள்ளத்திலே அழுந்தி மடிந்துபோம் இவ் வுலகம் என்பதை அறிந்து, தன் உடலைக் காட்டாது. முகத்தை மட்டும் காட்டுகிறதாம் மதி மிக்க மதி!

கவிஞரின் கவிகளைக் காண் போம்:—

தனிஒருவெள்ளிக் கலம், சிந்தும்
தாளங்கள் போல்வன நிலவு
நக்ஷத்திரம்
புனையிருள் அந்திப் பெண்ணாள் ஒளி
போர்த்த துண்டோ, எழில்
பூத்த துண்டோ? [1]

நீலமுக் காட்டுக்காரி நிலாப்
பெண்ணாள் வற்றக்காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றி
பருமத்தால் கடைந்து பானை,
மேலுள்ள வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசிவிட்டாள்
எலுமட் டுங்கோழா நீ எடுத் துண்பாய்
எழிலை எல்லாம்! [2]

நீலவான் ஆடைக்குள்
உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய்
ஒளிமுகத்தை!
கோல முழுதுங்
காட்டிவிட்டால், காதல்
கொள்ளையிலே இவ்வுலகம்
சாமோ? [3]

நிலாவின் அழகைக் கண்டு மகிழாதவர் யார்? அனைவரும் உற்று நோக்கிக் கொண்டிருந் தால் கண்ணெச்சில் படுமென்று கருதி மேகம் தன் கருந் திரை யால் அடிக்கடி மூடிவிடுகிறது அம் மதியை. சில சமயங்களில் சந்திரனைச் சுற்றிக் கடல் அலை களைப் போல மேக படலங்கள் படர்ந்து விடுகின்றன. அப் போது சந்திரன் கடலில் முழுகி எழுவதைப் போலவே தோன்று கிறான்.

முழு நிலாக் காலங்களிலே, நிலவு பால் போல் காய்கிறது. அவ்வொளி வெள்ளத்திலே பூமி அழுந்திக் கிடக்கிறது. அவ் வொளி வெள்ளம் ஓர் கடல் போலவும் தோன்றுகிறது. ஆகவே அவ் வொளி வெள்ளத் தைப் “பாற்கடல்” எனக் கொண்டு “பாற்கடலில் பரமன் பள்ளி கொள்ளுகிறான்” என் னும்போது, இரவுக் காலமாகை யால், மக்கள் துயில்வதைப் போல எங்கும் நிறைந்த பரம் பொருள் இப் பாற்கடலில் ‘அறி துயில் கொள்ளுகிறார்’ என்று இத் தோற்றத்தையே பண்டைக் கால மக்கள் சித்திரித்திருப்பார் கள் என்று கொள்ளலாம் போல் தோன்றுகிறது.

வானிலே ஆயிரக்கணக்கான விண்மீன்கள் மின்னிக் கொண்டு விளங்கும் காட்சியும் நமக்கு ஒரு சித்திரத்தைப் புலப்படுத்து கிறது. அஃதாவது, வான், ஒரு மயில், தான் தோகையை விரித்தாற் போன்றும், விண்மீன் கள் அத் தோகையிலுள்ள பொறிகள் போன்றும் விளங்கு கின்றன. “முருகன் மயில் மீது எழுந்தருள்கின்றான்” என்று சொல்லும் போது, தெய்வத்தின் முருகு அல்லது அழகு வானின் கண்ணும், விண்மீன்களினூடும் படிந்திருப்பதை முருகன் மயில் மீது அமர்ந்திருப்பதாக உருவப் படுத்திப் பழங்காலத்தவர் போற்றி மகிழ்ந்ததாக நாம் நினைக்கலாம் போல் தோன்று கிறது.

இவ்வகையாகக் கண்ணுக் கும், கருத்துக்கும், விருந்தளிக் கும் ஓவியங்கள் எத்தனையோ? தோன்றுகின்றன வானிலே. உற்று நோக்குவார், உற்று நோக்கி இன்புறுவார்களாக!

—oo✿oo—

# * நிலவுக்கு - - - - *

[ எண்ணம் ]

அன்புத் தோழிக்கு,

நலம்..........

மணமுள்ள மல்லி, இனிக்கும் கன்னல், வண்ண ஓவியம், கண்ணின் கருவிழி என்றெல்லாம் திருமண வாழ்விற்கு ஒப்புவமை கூறுவது வழக்கம்.

நினைத்தாலே என் நெஞ்சில் தானாக இன்பம் சூழ்கின்றதடீ!

நேற்று மாலை ஆடும் ஊஞ்சலில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தேன். இளமை உள்ளந்தானே!

"நீலப்பெருங் கடல்போல்
அசைந்திடு
செய்தற் பூத்தமலர் போல்—அவன்
கோலக் குளிர் விழிகள்
உளம் புகக்
கூடிடும் இன்பமடி

என்ற அடிகள் என் வாயிலிருந்து இசையோடு வந்து கொண்டிருந்தன.

"இளநகை" என்ற குரல் கேட்டேன். என் தாத்தா வந்துவிட்டார். அவர் நான் பாடி இருந்ததைக் கேட்டுத்தான் இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர் முகத்தின் இயல்பு வேறுபட்டிருந்ததின் காரணம்?

"உள்ள உணர்ச்சி" வார்த்தைகளின் வாயிலாக வெளிப்படா விட்டாலும், உறுப்புக்களின் மூலம் வெளி வந்து விடுகிறது.

"அழகான நிலைக் கண்ணாடியின் அருகில் சென்றால், நெருங்கிய உருவம் அதனுள் நன்கு தெரிகிறது. அது போல் நெஞ்சத்தின் நினைவுகள் முகத்தின் மாறுதல்களால் வெளிப்படுகின்றன." என்ற பொருள் பதிந்த குறட்பாவும் உண்டு.

மட்டற்ற மகிழ்ச்சியோ, அளவு கடந்த துன்பமோ ஒரு மனிதன் மனத்திடத்தே நிலவுமாயின், அவன் அதைப் பிறரிடம் சுருக்கமாகப் புரியும் வகையில், நேரிடையாகத்தான் கூறுவான். சுற்றி வளைத்துச் சொல்லமாட்டான். சொல்ல முடியாது.

இதை ஏன் தெரியுமா சொல்லுகிறேன். அளவு கடந்த ஆர்வத்தோடு, என் பெயரை அழைத்துக் கொண்டு உள் நுழைந்த என் தாத்தாவின் நிலையும் அப்படி தானிருந்தது.

உன் கருத்துக்குப் பொருந்திய கணவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்; என் விழிக்கின்றாய்! வேணியை உனக்குத் தெரியாது? அவன் தான், நீ ஐந்தாவது படிக்கும் போது, எதிர் வீட்டி லிருந்துகொண்டு பத்தாவது படித்துக் கொண்டிருந்தானே; "சுத்த மக்கு" என்று கூட அடிக்கடி நீ கேலி செய்வாயே! பட்டதாரிகளில் சென்னை மாகாணத்திலேயே அவன்தான் இப்போது முதன்மையாகத் தேறியிருக்கிறான்" என்றெல்லாம் வேகமாகப் பேசிக் கொண்டிருந்தார் என் தாத்தா.

"வாழ்க்கை" எத்தனையோ விசித்திரங்களைச் செய்து விடுகிறது. "காலம்" "சூழ்நிலை" என்பவை அவைகளுக்கு அடிகோலிகளாக அமைந்து விடுகின்றன.

தோழீ! நான் வேணியை மணந்துகொள்ளப் போகிறேனடி. என்னுடனும், உன்னுடனும், சிறு வயதில் ஓடி, ஆடி, பாடி உல்லாசமாக நாட்களை கழித்த அவனைத் தான்—இல்லை—அவரைத்தான்— என் வருங் காலக்கணவன், என்று தாத்தா கூறுகிறார்.

"இலங்கையில், இன்புடன் இல்லறக் காவில் இனிது உலவுகிறோம்" என்று எழுதி இருக்கின்றாய். உன் கணவன் கண்ணனுடனும், குழந்தை இளங்கோவுடனும் நீ நீடூழி வாழ்க!

நிலவு! நான் எழுதுவதைப் பார்த்து ஏளனம் செய்யாதே. நான் ஒரு இலட்சிய மனைவியாக இருக்க ஆசைப்படுகிறேன். அதுதான் என் வாழ்வின் குறிக்கோள்.

அன்பையே அடிப்படையாகக் கொண்டு நாங்கள் இல்லறத்தைத் தொடங்கு-


தருதலக் கைத்தறிகளில்

நெய்த

**மேல் துட்டைகள்**

**(டவல்கள்)**

முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!

மொத்தமாகவும் சில்லரை யாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!

தருதலம், மாம்பாக்கம்;

மதுராந்தகம் PO.

வோம். வேடனின் வலையிலே சிக்கிய மான், தூண்டில் முள்ளில் அகப்பட்ட மீன்,—அடக்கு முறையில் அவதிப்படும் மனைவி.

அசுத்தத் தன்மை உள்ள பன்றியைக் கண்டு ஒதுங்கிச் செல்லும் தன்மை—ஆணவம் தூண்ட, அதனால் மனைவி செய்யும் அதிகாரங்களுக்கு உட்பட்ட கணவன்.

இவ்விரண்டு நிலைகளும் நான் வெறுப்பது. நான் நினைக்கிறேன், இல்லறம் முகத்தின் இரண்டு கண்கள் என்று.

பொறுமையையே என் அணியாகக் கொள்வேன். பொருமை என் மனத்திடத்தே நிலவாது. "ஆத்திரம்" என்னருகே நெருங்காது. "ஆராய்ந்து பாராத தன்மை"க்கு என் மனத்திடத்தே இடம் இராது.

நற்பண்புகளையே நாடுவேன். "கற்பே" என் உயிர், உடல், ஊண், உறக்கம், பணம், குணம் எல்லாம்.

வீட்டு வேலைகள் முழுதும் என் பொறுப்பில் தான் நிகழும். நான் வீட்டிற்குப் "பொருளாதார" மந்திரியாய் இருப்பேன். கணவனுக்கு "ஆலோசனை" கூறுபவளாக அமைவேன்.

"தலைவன் மகிழ்ச்சி — தலைவிக்கும் மகிழ்ச்சி, அவன் துன்பம்— அவளுக்கும் துன்பம்" என்ற தமிழ்ப் பண்பாட்டை மனதிலிருத்தி அதன்படி நடப்பேன்.

நான் ஆடியும், பாடியும் தலைவனுக்கு இன்பமூட்டுவேன்— நாடக அரங்கிலோ, பொது மேடையிலோ அல்ல — தலைவன் முன்னிலையில் — வீட்டில்.

அதோ! தாத்தா வீட்டின் முன் பக்கம் வந்திருக்கும் ஒலி கேட்கிறது. கடிதத்தைப் பார்த்தால்...................... நினைத்துக் கொள்வார். மற்றவை மறு கடிதத்தில்.

—இளநகை.

# கச்சியப்பர் கவித்திறன்

சி. து. க.

பண்டைக் காலத்திலிருந்தே நம் தமிழகம் கவிஞர் பெருமக்களாற் சிறப்பெய்தி வந்திருக்கின்றது. சங்க கால முதல் இந்நாள் காறும் நம் தமிழகப் பூங்காவில், கவிஞர்களின் கற்பனைச் செழு மலர்கள் செய்யுட்களாக அவ்வப்போது புதிது புதிதாகத் தோன்றி என்றும் புலராது. யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்த் திகழ்கின்றன. புலவர் பெருமக்கள் உள்ளத்தினின்று பெருகிய இனிய கருத்தலைகள் இன்னறுங் கவிகளாகப் பெருகியோடி நாடெங்கும் பரவிச் சென்று மக்கள் உள்ளமெல்லாம் இடங் கொண்டு இன்பளித்தன.

இத்தகைய சிறப்பினையுடைய கவிஞர் பெருமக்களில் கச்சியப்ப முனிவரும் ஒருவராவர். இப்புலவர்பெருமான் திராவிட மாபாடியங்கண்ட சிவஞான யோகிகளின் மாணவர். கவிஞர் பெருமான் என்றும் கவிராட்சசரென்றும் பெரும்புகழ் பெற்று விளங்கியவர். சங்க நூல் வழக்கும் பொருண் முடிபுகளும் அழகியல்புகளும் இவரருளிய நூல்களில் யாண்டுங் காணலாம். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இனிய சொல்வளம் பொருள் வளத்தோடும் திகழும் இவருடைய நூல்களில் பொதிந்துள்ள நயங்கள் பலவற்றையும் ஒன்றுவிடாமல் நுனித்தறிந்து கூற எம் போன்றார்க்கு இயலாததேனும் மேலோட்டமாக ஆங்காங்கும் புலப்படும் அழகியல்புகளிற் சிலவற்றைத் தொகுத்து உரைத்தலே இக்கட்டுரை நோக்கமாகும்.

கச்சியப்பர் இயற்றிய எல்லா நூல்களுமே கற்றறிந்தோர் எத்தும் கவின் வாய்ந்தன வென்றாலும், அவற்றுள் 'தணிகைப் புராணம்' மிகச் சிறந்த சுவைக்களஞ்சியம் என்று கூறலாம். தம் மாணவர்கள் சீவக சிந்தாமணியின் கவிச்சுவையினைப் பாராட்டிப் பேசுதல் கண்டு யாண்டும் தெய்வமணம் கமழும் இப்பெரு நூலை அச் சிந்தாமணியின் சிறப்பியல்புகளும் ஓசையின்பமும் யாண்டும் சிறப்பாகக் காணும்படி சொற்சுவை பொருட்சுவை மலிய இவர் பாடினார் என்பர்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாசுடெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

புலவர் பெருமான், தொண்டை நாட்டவர். தணிகையம்பதியில் நீண்ட காலம் வாழ்ந்தவர். எனவே இவர் தொண்டை நாட்டு வளத்தையும் தணிகைச் சிறப்பினையும் நூற்றுடக்கத்தில் மிகச் சுவையாக விரித்துரைக்க முடிந்தது.

படலத் தொடக்கத்தில், பாலியாறு முதலிய நதிகளின் இயல்பைக் கூறுகின்றார். கோடையினும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் அவற்றின் சிறப்பால் மற்ற நாடுகளை விடத் தொண்டை நாடு சிறப்புடையதாகின்றது.

கோண்முறை பிறழ்ந்து மாறிக்
குளிர் பெயல் வறக்கு மேனுந்
தாண்முறை தப்பா வண்ணந்
ததைமண லகழுந் தோறு
மூண்முறைப் புனல்வந்தோடு
மொலிநதிக் குலத்தாலேனை
வீண்முறை நாட்டை யெல்லாம்
வீழ்த்தது தொண்டை நாடு.

கோள் நிலை திரிந்தால் மாரி வறங்கூர்கின்றது. ஆறு குளங்கள் வற்றி நாட்டில் பஞ்சம் பரவுகின்றது. ஏனைய நாடுகளிலாயின் மக்கள் பஞ்ச நிலையைப் போக்க ஏதும் செய்ய இயலாராய்க் கோள்களைப் பழித்து வறிதே நாட்களைக் கழிப்பர். ஆனால் தொண்டை நாட்டவர் என்றும் முயற்சியில் தளராதவர். கோடையிலும் தம் உழைப்பினால் ஆற்றில் நீர் பெருகக் கண்டு கோடையைப் புறங்காணுகின்றனர். இந்நிலையில் நாடும் ஏனைய நாட்டை விடச் சிறப்புடையதாகிறது. இச் செய்யுள்,

"கோணிலை திரிந்து
கோடை நீடினும்
தானிலை திரியாத்
தண்டமிழ்ப்பாவை"

என்னும் அடிகளை நினைவூட்டுகிறது.

முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழிகளையும் பொன்னே போல் போற்றும் பெரியோர் மரபுக்கிசைய நம் புலவர் பெருமான் தொண்டை நாட்டுச் சிறப்பினை விளக்குதற்குத் திருக்குறள் "நாடு" என்னும் அதிகாரத்தில் வரும் சொற்பொருளமைதிகளை 'வருபுனல்' 'பல்குழு' என்னும் இரண்டு திருவிருத்தத்துள் வைத்து விளக்கி யுள்ளார். "தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்னும் ஔவையார் கருத்தினையும் தக்க விடத்திற் பெய்துரைத்துள்ளார்.

சேக்கிழார் பெருமான் தொண்டை நாட்டுச் சிறப்பினை (திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்) விளக்கும் வுந்நெறியை ஒப்ப, கச்சியப்பரும் குறிஞ்சி முதல் ஐந்திணை வளத்தையும் விவரித்துச் செல்கின்றார். குறிஞ்சி நாட்டின் சிறப்பினைக் கூறுமிடத்து,

அன்பினைந்திணைக் களவலாற்
களவொன்று மறியார்
இன்ப மாண்பிரி வினைவலால்
இனை வொன்று மெய்தார்
துன்ப மோட்டுவாய்ப்
பொய்யலாற் பொய் யொன்றுஞ்
சொல்லார்
முன்பு மாதவப் பயத்தினு
லவண்முயக் கமர்வர்.

என்று அந்நிலத்து நிகழும் களவு, துன்பம், பொய் என்பன தீமையற்ற நிலையில் இருப்பதனை விளக்கிக் காட்டினார்.

குறிஞ்சி நிலத்துக் கடுத்தபடியுள்ள பாலையில் கொற்றவை வீற்றிருப்பதற்குக் காரணம், குறிஞ்சித் தெய்வமாகிய 'முருகவேள்' என்னும் தன் அருமைத் திருமகனை நீங்கியிருக்க முடியாத நிலையினாற்றான் என்றும், தன் அருமைத் தங்கையாகிய ஆளிக் கொடியாளைப் பிரிந்திருக்க இசையாமற்றான் திருமால், முல்லையில் தங்கியிருக்கின்றான் என்றும், தன்னோடு உடனிருந்து அரசளித்தும், அவுணர்களை ஒழித்தும் உதவி செய்த உபேந்திரனான திருமாலை நீங்கியிருக்க இசையாமல் இந்திரன் முல்லைக் கடுத்த மருதத்தில் தங்கியிருப்பதாகவும் உலகத்தில் கிழக்கு மேற்கு என்று இரு திசைகளையும் தொடர்பு படுத்தி பொழியும் ஒரு வழக்கினை ஒட்டிக் கிழக்குதிசை யிறைவனாகிய இந்திரனுக்குரிய மருதத்துக் கடுத்த நெய்தலில் மேற்றிசைக் கடவுளாகிய வருணன் தங்கியிருக்கிறான் என்றும் தொடர்புண்டாக்கிக் கூறும் அழகுகள் உன்னற்குரியவாம்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)